உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 7 || 1925௵ ஏப்ரல்மீ || பகுதி 4

தெய்வ வணக்கம்

குமாரகுரு பதிகம்

பூங்கதிர் விரிக்குமதி தாங்கு சிகரப் பெரிய
பொன்மலையில் இம்மென விழும்
புனல்நதி கறுத்த நிற இனமணி கொழித்த செயல்
போற் கவுண் மதத்தருவியின்
பாங்கர் வரி வண்டின் குழாங்கள்சுதிகொண்டிசை
பகர்ந்து புரளும் புகர்முகப்
பஞ்சகர குலநளின செஞ்சரண மவுன கண
பதிசகோதர வேலவா
மாங்குயிலை வென்றமொழி ஓங்குகன கும்பதன
மாழை யொண்கட் பவளவாய்
மஞ்சரி நெடுங்குழற் குஞ்சரி மகிழ்ந்து நிதம்
மருவு மங்கள நாயகா
தேங்கமழ் தருங்கங்கை வேணியற் கினியபொருள்
செப்பு மெய்ஞ்ஞான வடிவே
செயமிகுத் துலவுதிரு மயில்வயப் பரியில்வரு
சிவகிரிக் குமாரகுருவே.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர்

ஹிதோபதேசம்

1. அறிஞருடன் நட்புக் கொள்ளல் வேண்டும். அவர்களுடைய நட்பு எப்போதும் நன்மையையே தரும். அந்த நட்பை நழுவவிடுதல் கூடாது. அறிஞரைப் போற்றுதல் உலகத்தையாளும் அரசனுக்கும் உரிய கடமையாம்.

2. அறிஞரிடம் பகைகொள்பவன் அல்லல் பல அடைவான். முன் ஒரு சமயம் காளமேகப்புலவர் என்னும் ஒரு பெரிய புலவர்க்குத் திருமலைராயன் என்னும் ஓர் அரசன் கோபமுண்டாக்கினன். புலவர் அவன் புரமழிய ஒருபாட்டுப்பாடினர். பாடியதும் மண் மாரிபெய்தபடியால் அவன் நகரம் அழிந்தது.

இதனாலே தான்—

விற்போரினும் மற்போரினும் சொற்போரே வலி யுடையது என்றும் காவலனுடைய கைச்சாபத்தினும் (வில்லினும்) நாவலருடைய வாய்ச்சாபமே கடுமையுடை யது என்றும் வில் அம்பினும் சொல் அம்பே வலிமை யுடையது என்றும் பழமொழிகள் வழங்குகின்றன.

"வில்லம்பு சொல்லம்பு மேதினியில் அம்பிரண்டாம்
வில்லம்பில் சொல்லம்பே வெய்யதாம்—வில்லம்பு
பட்டதடா என் மார்பில் பார்த்திபா நின் குலத்தைச்
சுட்டதடா என் வாயில் சொல்" என்று கம்பரும் கூறி யிருக்கின்றார்.

3. கல்வி அன்னையைப்போல் ஆதரிக்கும்; தந்தை யைப்போல் நல்வழிப்படுத்தும்; மனைவியைப் போல்

துணைபுரியும்; மைந்தனைப்போல் பணிசெய்யும்; கற்பகத் தருவைப்போல் விரும்பியவைகள் அனைத்தையும் தரும். அன்றியும் அது,

* "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து"—என்று

தமிழ்வேதம் கூறுகிறபடி எழுபிறப்புந் தொடர்ந்துநின்று நன்மையையளிக்கும். இதனாலேதான் "கல்வியினூஉங் கில்லைச் சிற்றுயிர்க் குற்றதுணை" என்றார் மேலோர்.

4. எந்தக் காலத்திலும் தைரியத்தைக் கைவிடுவது கூடாது. தைரியசாலிக்குக் கனலும் புனலாகும்; பெரிய கடலும் சிறிய குட்டையாகும்; மேருவும் பரலாகும். சிங்கமும் சிறு மானாகும். நல்லபாம்பும் மிருதுவான மாலைக்கு நேராகும். விஷமும் அமிர்தமாகும். "அச்சம் ஆண்மையைக் குலைக்கும்" "அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்"

5. அறிவுடையவர், தாம் முடிப்பதாக மேற்கொண்ட காரியம் முடிவுறும் அளவும் தம்முடைய மனோபலத்தைப் பிறரறியவிடார். ஆனால் பிறருடைய மனநிலைமையை அவர்களுடைய அவயவ நிலைகண்டு தெரிந்துகொள்ள வல்லவராயிருப்பர். எல்லாம் வல்ல பிரபுவாகிய திருமால் மகாபலியிடம், பூமியைக்கேட்டு வாங்கச் சென்றாரல்லவா? அப்போது அவர் தம்முடைய முயற்சியைப் பிறர் அறியாதிருக்க எண்ணி உருமாறிச் சென்றாரன்றோ?

---

* ஒருவன் ஒரு பிறப்பிலே கற்ற கல்வியானது அவனுக்கு எழு பிறப்பிலும் துணையாம்.

விதியை வெல்வது அரிது

அமைத்த படியே அமையுமலால் வேறே
சமைத்தற் கெவராலும் சாயா—தமைத்த
விதிகடக்கக் கஞ்சன்முன் வீண்முயற்சி செய்த
கதைபடித்து நீயிதனைக் காண்.

வடமதுரையில் உக்கிரசேனன் என்னுமொரு யாதவ வேந்தனிருந்தான். அவனுக்குத் தேவகன் என்று ஒரு தம்பி ; கம்ஸன் என்றொரு மகன். கம்ஸன் மிகப் பொல்லாதவன் ; கொல்லுங் கொலைக்கஞ்சாதவன், ஆனால் மகா பராக்ரமசாலி ; திடசரீரி. அவனைக் கண்டவரெவரும் அஞ்சுவர். அவன் தன் மனம்போனபோக்கில் நடப்பவன் ; மரியாதை தெரியாதவன். முறையை மீறிச் செல்லும் முரடன்.

இவன் தன் தந்தையைச் சிறையிலிட்டுத் தான் அரசனானன். அதனால் இவனிடம் எல்லாரும் வெறுப்புக்கொண்டனர்; "பாதகன் தன்னுடைய மூடபுத்தியை மலைமேல்வைத்த விளக்கைப்போல் உலகத்துக்குக் காட்டி விட்டான்" என்று இகழ்ந்தார்கள்.

இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் கம்ஸன் கவனிக்கமாட்டான். தன் பெருமையும் தன் பராக்கிரமமும் தன் பேச்சும் தன் அதிகாரமுந்தான் அவனுக்குத் தெரியும். இப்படிப்பட்ட இவனுடைய சிற்றப்பனாகிய தேவகனுடைய புத்திரி தேவகி என்பவளுக்கு விவாகம் நடந்தது. வசுதேவர் என்கிற இராஜகுமாரர் அவளை மணந்து கொண்டார். மணமுடிவில், மணமகனையும் மணமகளையும் இரதத்தில் வைத்துக் கம்ஸன் சாரதியாயிருந்து ஊர்வலஞ் செய்வித்தான்.

அப்பொழுது, "அடே மூடா, நீ இரதத்தி லேற்றி வைத்துக்கொண்டு போகும் உன் தங்கையி னுடைய எட்டாவது பிள்ளை உன்னைக் கொன்றுவிடும்" என்று ஓர் அசரீரி வாக்கு உண்டாயது. அதைக்கேட்ட தும் கம்ஸன் கோபங்கொண்டு இரதத்தை நிறுத்தி, "இவள் இருந்தால் அல்லவோ இவளுக்கு எட்டாவது பிள்ளை பிறந்து என்னை அது கொல்லும். இதோ இவ ளைக் கொன்று விடுகிறேன்" என்று கூறித் தன் கத்தியை உருவிக்கொண்டு தேவகியை வெட்ட அவள் தலைமயிரைப் பிடித்தான். வஸுதேவர் தடுத்து, "அப்பா, மனிதனுக்கு ஆறிலும் சாவு நூறிலும் சாவு. பூமியிலே பிறந்த எந்த ஜீவனுக்கும் மரணமுண் டென்பது நிச்சயம். உனக்கு மரணம் அப்படியுண்டாகு மென்பதே அசரீரி கூறியது. அதை நீ தடுப்பதெப் படி? அன்று அயன்விதித்தவிதி அது போலிருக்கிறது. இப்படியிருக்க நீ மரணத்திற்குப் பயந்து உன் தங்கை யைக் கொல்வது நியாயமாமோ? இதனால் என் கெட்ட பேர் அடைய வேண்டும்?" என்று நியாயங்கூறினார்.

கம்ஸன் அவர் சொன்ன புத்திமதியை ஏற்றுக் கொள்ளாமல் மறுபடியும் தேவகியை வெட்டப்போனான். வசுதேவர் எனக்குப் பிறக்கும் பிள்ளைகளை யெல்லாம் உன்னிடம் கொடுத்து விடுகிறேன். நீ அவற்றை உன் விருப்பப்படி செய்துகொள். இவளல்லவே உன்னைக் கொல்லப் போகிறவள்; இவள் பிள்ளைதானே?" என்று மிகுந்த இரக்கத்தோடு சொன்னார். கம்ஸன், "அப் படியே செய்வோம்" என்று கூறித் தேவகியை விட்டு விட்டு இரதத்தைச் செலுத்திக் கொண்டுபோய் ஊர் வலத்தை முடித்தான்.

அப்பால் வசுதேவரும் தேவகியும் அவனுடைய பார்வையிலே வசித்து வந்தனர். அப்பொழுது அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. பிறந்தவுடன் வசுதேவர் அதைக் கம்ஸனிடம் ஒப்புவித்து விட்டார். அவ்வாறே அவர் தமக்குப் பிறந்த ஆறு குழந்தைகளையும் அவனிடம் கொடுத்தார். அவன் அந்த ஆறு குழந்தைகளையும் கொன்று, இனி நாம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும் என்றெண்ணி வசுதேவரையும் தேவகியையும் சிறையிலடைத்து விட்டான்.

பிறகு பகவான் தேவகியின் ஏழாவது குழந்தையை அது பிறப்பதற்கு முன்பே வசுதேவரின் இன்னொரு மனைவி ரோஹிணியென்பவளிடம் சேர்த்துவிட்டார். அவள் ஓர் ஆண் மகவைப்பெற்றாள். அப்பால் எட்டாவது குழந்தை கோகுலாஷ்டமியன்று இரவு சந்திரோதய காலத்தில் பிறந்தது. அது சங்கு சக்கரங்களும் பீதாம்பரமும் தரித்துக்கொண்டிருந்தது. அதற்கு நான்கு கரங்களிருந்தன.

அதைக்கண்டதும் வசுதேவரும் தேவகியும் பகவானே அவதரித்திருக்கிறாரென்று அறிந்து ஸந்தோஷமடைந்தார்கள். உடனே அவர்கள் காலிற் பூட்டியிருந்த விலங்குகள் தாமே தரித்துப்போய் விலகின. அது கண்ட அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். இப்பொழுது சிறைச்சாலைக் காவலாட்கள் தங்களை மறந்து தூங்கிவிட்டனர். வசுதேவர் இந்தக் குழந்தையை வெளியே கொண்டுபோய் யாரிடமாவது சேர்த்துவிட வேண்டுமென்று எண்ணி, "எப்படிச்சேர்ப்பது?" என்று வருந்தினர்.

அப்பொழுது குழந்தை சாதாரணக் குழந்தையாய் விட்டது. சிறைக் கூடக்கதவும் திறந்துகொண்டது. வசுதேவர் அதுகண்டு ஸந்தோஷமடைந்து, அந்தக்குழந்தையை எடுத்துக்கொண்டு மெதுவாய்ச் சிறைச்சாலையிலிருந்து வெளிப்பட்டார்; அப்பொழுது அவர்க்கு யமுனையாற்றுக்கு அக்கரையிலுள்ள கோகுலத்திலிருக்கும் நந்தகோபரிடம் குழந்தையைச் சேர்ப்பிப்பது நல்லதென்கிற எண்ணமுதித்தது. உடனே வசுதேவர் மெதுவாய் நடந்து நகரைக்கடந்து யமுனையைத் தாண்டிக் கோகுலம் போய் நந்தகோபருடைய வீட்டிற் பிரவேசித்தார். நந்தகோபருடைய மனைவி யசோதை என்பவள். அவளுக்கு அப்பொழுதுதான் ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது. யசோதை அப்பொழுது மயக்கமாய்ப் படுத்திருந்தாள். நந்தகோபர் அச்சமயம் வீட்டிலில்லை. அதைக்கண்டு வசுதேவர் "எல்லாம் பகவானுடைய செயல்" என்றெண்ணித் தம்முடைய பிள்ளையை அவளிடம் கிடத்திவிட்டு அவளுடைய பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு விரைவாக நடந்து மதுரை சேர்ந்தார்; பகவானல்லவா காப்பாற்றுகிறாரென்றெண்ணிக் கொண்டே சிறைச்சாலையிலே பிரவேசித்துத் தேவகியினிடம் குழந்தையைக் கொடுத்துச் செய்தியைத் தெரிவித்தார்.

இப்பொழுது சிறைச்சாலைக் கதவும் மூடிக்கொண்டது. அவர்கள் விலங்கும் பூட்டிக்கொண்டது. காவலாட்களும் விழித்துக்கொண்டார்கள். கம்ஸனும் குழந்தை பிறந்ததையறிந்து அதை வாங்கிக்கொள்ள அங்கு வந்து சேர்ந்தான். தேவகியும் வசுதேவரும் இவற்றையெல்லாங் கண்டு ஆச்சரியமடைந்து பகவானுடைய

திருவருளையெண்ணி அவரையே தியானித்துக் கொண்டிருந்தார்கள்.

பிறகு வழக்கம்போல் கம்ஸன் குழந்தையைக் கேட்டு வாங்கி அதனை ஒரு பாறையிலே போட்டுக் கொல்ல முயன்றான். அப்பொழுது அக்குழந்தை அவனுடைய கையைவிட்டு நழுவி உயரக்கிளம்பித் தேவிரூபத்தோடிருந்து, " அடே பாவி, என்னைக்கொல்வதால் உனக்கென்ன பயன்? உன்னைக் கொல்பவன் வேறோரிடம் வளருகிறான். வீணே ஏன் சங்கடப்படுகிறாய் ?" என்று கூறி மறைந்துவிட்டது.

இப்படி அக்குழந்தை சொல்லக்கேட்ட கம்ஸன் ஆச்சரியமடைந்தான்; "ஐயோ, வீணாக வசுதேவரையும் தேவகியையும் வருத்தினேன் பாவி" என்று எண்ணிப் பச்சாத்தாப மடைந்தான்; அக்கணமே சிறைச்சாலை சென்று அவர்களைவிடுவித்து அவர்களைப் பணிந்து மன்னிப்புக்கேட்டுக் கொண்டான். வசுதேவரும் தேவகியும் கம்ஸனைச் சமாதானப்படுத்திவிட்டு அவனுத்தரவின்பேரில் தம்மிருப்பிடம் சென்றனர்.

மறுநாள் கம்ஸன் மந்திரிமார்களுடன் ஆலோசனை செய்து தன் பகையாக வளரும் குழந்தையைக் கண்டு கொல்லும்படி பூதனையென்கிற ஓர் இராக்ஷஸியை அனுப்பினான். பூதனை ஓர் இடைச்சியைப்போல் கோகுலஞ் சென்று யசோதையின் குழந்தையை யெடுத்துக்கொஞ்சுவதுபோல் கொஞ்சி அதற்குப் பால் கொடுத்தாள். பகவானாகிய அந்தக்குழந்தை அவளுடைய இரத்தத்தை அப்படியே உறிஞ்சி அவளைக் கொன்றுவிட்டது. அது கண்டு இடையர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

அப்பால் இந்தக் குழந்தையும் ரோகிணியினுடைய குழந்தையும் நன்றாய் வளர்ந்து வந்தன. ரோகிணியின் குழந்தைக்கு ராமன் என்றும் யசோதையின் குழந்தைக்குக் கிருஷ்ணன் என்றும் பெயரிட்டார்கள். இராம கிருஷ்ணர்களிருவரும் பாலலீலைகள் பல செய்தனர். அதனால் அவர்களைத் தெய்வாம்ச முடையவர்களென்று எல்லாரும் எண்ணினார்கள். பின்பு, அந்த ராமகிருஷ்ணர்கள் தன்னுடைய பகைவர்களென்று கம்ஸனுக்குத் தெரிந்தது. கம்ஸன் அவர்களைக் கொல்ல அசுரர்களை ஏவினான். அசுரர்கள், கழுதையாகவும் குதிரையாகவும் வடிவங்கொண்டு சென்று அவர்களைக் கொல்லப்பார்த்து இறந்தார்கள்.

இப்படியாகவே, கம்ஸன் அவர்களிருவரையும் தன் அரண்மனையின் முன் வரவழைத்து மல்லர்களோடு மல் யுத்தஞ் செய்யச்செய்து அவர்களைக் கொல்லப்பார்த்தான். மல்லர்கள் அவர்களை வெல்ல முடியாமல் அவர்களால் அடியுண்டு மடிந்தனர்.

அப்பால், கம்ஸன் ராமகிருஷ்ணர்களை அவமதித்துப்பேசினான். அதனால் கிருஷ்ணன் கோபங்கொண்டு கம்ஸனை எதிர்த்துச் சண்டைசெய்து அவனைக்கொன்றான். மகா "கொடியவன் ஒழிந்தான்; பாதகன் தொலைந்தான்; பிதிர்த்துரோகி செத்தான். பகவானுடைய செயலை இவன் தடுப்பதெப்படி? விதியை வெல்வதற்கு முடியுமா?" என்று சொல்லி இகழ்ந்து, கிருஷ்ணனை வாழ்த்திப் புகழ்ந்தனர்.

கிருஷ்ணன், கம்ஸனுடைய தந்தையைச் சிறையிலிருந்து விடுவித்து அவரை அரசனாக்கினான். வசுதேவரும் தேவகியும் தாங்கள் பெற்ற அரும்பெருஞ்

செல்வங்களாகிய ராமகிருஷ்ணர்களைத் தழுவிக்கொண்டு என்றுமடையாத ஆநந்தமடைந்து வாழ்த்தினார்கள். பிறகு எல்லாரும் யாதொரு குறையுமில்லாமல் வாழ்ந்து வந்தார்கள்.

பிள்ளைகளே—கடவுள் நியமித்தபடியே எல்லாம் நடைபெறும். அவருடைய அந்த ஏற்பாட்டை எவராலும் மாற்ற முடியாது. ஆகையினால் "எல்லாம் இறைவன் செயல்" என்று எண்ணி எப்போதும் அவரைத் தியானித்துவருவதையேகடமையாகக்கொள்ளவேண்டும். அப்பொழுது நீங்கள் நல்ல வழிப்பட்டுச் சகல நன்மைகளையும் அடைவீர்கள் என்பதில் ஐயமில்லை.

உஷை

அல்லது

கனவிற்கண்ட காதலன்.

நீர்வளம் நிலவளம் நிறைந்த இந்தப்பரத கண்டத்தில் சோணிதபுரமென்று ஒரு நகரமிருந்தது. பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னே, பலியென்னும் சக்ரவர்த்தியின் குமாரர்கள் நூற்றுவரில் மூத்தவனான பாணாசுரன் என்பவன் அந்தப்பட்டணத்தை ஆண்டுவந்தான். அந்த அசுரன் நிகரற்ற ஆண்மையடையக் கருதி அரணியஞ்சென்று, சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவனது அரிய தவத்தைக் கண்டு ஆனந்தங்கொண்ட உமாபதி, அவனுக்குக் காட்சியளிக்கத் திருவுளங்கொண்டு, ஆகாயவீதியில் தோன்றினார். முக்கட்பரமனைப் பார்த்து, மட்டற்ற மகிழ்ச்சி

யடைந்து, அவரைத் தோத்தரிக்கும் வகையுந் தெரியாமல் நின்ற அந்தப் பக்தனைச் சிவபிரான் நோக்கி, "அன்ப! உன் தவத்திற்கு மெச்சினோம், உனக்கு வேண்டும் வரம்யாது?" எனக் கேட்டருள, அசுரன், "என் ஐய! இந்த ஏழைமீது இரக்கங்கொண்டு காட்சி தந்தருளிய கருணையை என்னென்றுரைப்பேன்! ஆயினும் சிற்றறிவினேன் அண்ணலை வேண்டிக் கேட்டுக் கொள்வது ஒன்றுளது. எனக்கு ஆயிரம் புஜங்களும் புஜபல பராக்ரமும் கொடுத்தருளல் வேண்டும். எனது நாட்டினை நீரே உமது பிரமதகணங்களுடன் காவல் புரிய வேண்டும்" என்று கேட்டான். அவரும் "அன்ப! அப்படியே அளித்தோம்" என்று திருவாய்மலர்ந்து திருவுருக்கரந்தருளினார்.

வரம்பெற்ற நிருதன் சோணிதபுரத்தை யடைந்து தன்னையே தெய்வமென்று எல்லாரும் வணங்கிவர அரசாண்டு வந்தான்; பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமனைப் பகைக்க ஆரம்பித்தான்; அந்தப் புண்டரீகாக்ஷன் பெயரைக் கேட்கவும் கூசினான்; அவனை நினைப்பவரையும் கொல்வான்.

சிறிது காலத்திற்குள் அவனுக்குப் பகைவர்களே இலராயினர். தனது மாயாசக்தியாலும், வரத்தின் பலத்தாலும் அவன் எல்லாரையும் வென்று விட்டான். அவனுடைய நகருக்குக் காவலாயிருந்த முக்கட்கடவுளை முறியடித்து அவன் நகருக்குள் பிரவேசிக்கத் தேவர்களும் அஞ்சினர்.

இவ்வாறு பகைவர்களுமின்றித் தனக்கேற்ற காரியமுமின்றித் தன் பலம் வீணாய்ப் போவதைக்கண்ட அசுரன் தன்னை எதிர்க்கவல்ல மல்லன் ஒருவனைத்தேடித்

திரிவானுயினுன். தெய்வபலத்தோடுவரபலமுங்கொண்ட அம்மாய அசுரனோடு எவர்தாம் மனந்துணிந்து மல்யுத்தம் செய்வர்! தனக்கு வரங்களைத்தந்த அந்தமுக்கட்பரமனையே வேண்டுதல் தகுதியுடைத்து என்று எண்ணி, கானகமடைந்து ஆற்றின் நீரில் ஆழ அமர்ந்து அவன் அருந்தவமியற்றினுன். அரன் அவன்முன்தோன்றி, "பாண! நீ வேண்டும் வரம் யாது?" என உவந்து கேட்க, அசுரன், "அண்ணலே! மரகதக்குன்றனைய என் புயாசலங்களில் தினவெடுக்கின்றன. எனக்கேற்ற மல்லன் ஒருவனைக் கொடுத்தருளல் வேண்டும்" என்று வேண்டினுன். அவனுடைய செருக்கைக்கண்ட கபாலி சிறிது சீற்றங்கொண்டாரெனினும், பக்திவலையிற்படுவோனுதலால் அவனை நோக்கி, "பாண! நீ கவலைப் படாதே! உன் நகரின்கண்ணுள்ள கொடிமரம் தானே யாடிக் கீழே விழும். அந்தக்காலத்தில் உன் செருக்கை யடக்கும் மல்லன் ஒருவன் தோன்றுவான்" என்றார். அசுரன், "ஆதிநாயக! அக்காலை நீர் என்னைக் காத்தருளல் வேண்டும்" எனப்பணிந்து வேண்டினுன். சிவபெருமான் "அப்படியே செய்வோம்" என்று கூறி மறைந்தார். பாணுசுரன் தன்பதியை அடைந்து முன்போலவே அரசு புரிந்து வந்தான்.

இவ்வாறிருக்கையில் பாணன் மனைவி கருவுற்று இளஞ்சந்திரனையொத்த ஒரு பெண்மகவை ஈன்றனள். குடிமக்களனைவரும் பெருமகிழ்ச்சி கொண்டு உற்சவம் கொண்டாடினர். பாணன் பலதானங்களைச் செய்து எல்லோரையும் களிப்பித்தான். மக்கட்செல்வமே எல்லாச்செல்வங்களிலும் சிறப்புடைத்தன்றே?

பிறந்த பெண் குழந்தைக்கு உஷை என்று பெயரிடப்பட்டது: அவள் வளர் பிறையைப்போல் வளர்ந்து அழகிலும், அறிவிலும், நல்லகுணத்திலும் மேம்பாடடைந்து மடந்தைப் பருவத்தை அடைந்தாள்.

ஒருநாளிரவு அந்தமடந்தை பஞ்சுமெத்தையின் மேல் துயில் கொள்ளுங்காலையில் கனவொன்று கண்டாள்; உடனே முகமலர்ச்சியுடனெழுந்து, தன் உயிர்ப்பாங்கியைத் தட்டியெழுப்பி, "சித்ரலேகா! நான் உனக்குத் தெரிவிக்கப்போவது, என் மனத்தின் கண் புதைந்து கிடக்கவேண்டிய ஒரு இரகஸ்யம். ஆயினும் உனக்குஅதைச்சொல்லாமலிருக்க முடியாது. ஏனெனில் நான் கருதிய பொருளைப் பெறவேண்டுமானால் உன்னுடன் சொல்லித்தானாகவேண்டும். அதுவும் உன்னாலேயே தான் முடிவடையும். மன்மதனையொத்த ஆடவனொருவன் தன்னழகினால் என்னை மயக்கி, எனக்கு முத்தமொன்றைக் கொடுத்துப் போயினன். நான் அவனைக் காணக் கூசினேன். என் கண்கள் கூசில. என் மனமும் அவனை நினைக்கக் கூசிலது. நாணம் என்னை விட்டு நீங்கியது. பேதைமை என்னைவிட்டுப் பறந்தது. நான் அவனையே என் கணவனாக வரித்துவிட்டேன். அவனைப்பெறும் உபாயம் யாது?" என்று கேட்டாள். பாங்கி, "மங்காய்! இதோ இருக்கும் சித்ரப்படங்களைப்பார்" என்று கூறிப் பல தேச இராஜகுமாரர்களின் சித்ரப்படங்களைக் காட்டினாள். ஒன்றிலும் தன் காதலன் இல்லாதிருக்கக்கண்டு உஷை அவைகளைத் தள்ளிவிட்டனள்.

அரசகுமாரி, வருந்துவதைக் கண்ணுற்ற சித்ரலேகை, உடனே சென்று இன்னும் பல அரிய படங்

களைக் கொண்டுவந்து உஷையின் கையிற் கொடுத்தாள். ஸ்ரீகண்ணபிரானுடைய திருவுருத் தாங்கிய சித்ரப்படத்தைப் பார்த்ததும், "அடி சகீ, யான் பார்த்த தனிக் குமரன் இப்பிரானது சாயலையே கொண்டிருந்தான்" எனக் கூறினாள். உடனே அடுத்தாற்போல், கிருஷ்ண மூர்த்தியின் திருக்குமாரனாக அவதரித்த அநிருத்தனுடைய படத்தை எடுத்துப் பார்த்தாள்; பார்த்ததும் அதை வாங்கி அதற்கு முத்தமொன்று தந்து, அதைத் தன் மார்போடும் அணைத்து, "அடி சித்ரா! இவர் வசிப்பது எந்தப்பதியோ? இவர் எக்குலத்தைச் சேர்ந்தவரோ? எக்குலத்தினராயினும் என் மனத்தைக் கொள்ளை கொண்டவராதலால் இவரையே நான் அடைய வேண்டும். நான் அவரை அடைவதற்கு நீயே உதவி செய்தல் வேண்டும்." என்று இரந்து வேண்டினள்.

சித்ரலேகை, "இளவரசீ! உன் பிதாவின் குல விரோதியை யல்லவா நீ காதலிக்கின்றாய்! உன் காதல் அறியாமையால் விளைந்ததல்லவா? இந்த எண்ணத்தை விட்டுவிடு. உன் தகப்பன் உனக்கென வரிக்கும் கணவனை மணந்துகொள்" என்று இதமாக மொழிந்தாள். "சித்ரா! என் குலவழக்கிற்கேற்ற சுயம்வரம் என்பதொன்றுண்டல்லவோ? அச்சுயம் வரத்தில் நான்வரிக்கும் கணவனையல்லவா என் தகப்பன் எனக்கு மணமுடித்துக் கொடுக்க வேண்டும். இப்போதே நான் என் கணவனை வரித்து விட்டேன்" என்று கூறினாள்.

சித்ரலேகை ஒன்றும் சொல்லத் தோன்றாமல் சிறிது நேரம் மயங்கி நின்றாள்; பாணாசுரனுக்கு இவைகளெல்லாந் தெரியவரின் தன்கதி யாதாம் என்று எண்ணிப் பயப்பட்டாள்; "இளவரசீ! உன் காதல

ளோடு நீ எங்கிருப்பாய்?" என்று கேட்க, உஷை, "சகி! அக்கவலை உனக்கு வேண்டுவதில்லை. நீ அவரை இங்கே கொண்டு வருவாயானால் அவரோடு நான் என் அந்தப்புரத்திலேயே வாழ்ந்து வருவேன். எல்லாம் மர்மமாகவே இருக்கட்டும்" என்றாள். வரும்

ஹாஸ்யம்.

(1) உபாத்தியாயர்:—பிள்ளைகளே உங்களுடைய வகுப்பில் சோம்பேறி யார்?

பையன்கள்:—சோம்பேறி என்றால் என்ன அர்த்தம் ஸார்?

உபா:—எல்லாரும் படிக்கும்பொழுது சும்மா உட்கார்ந்திருப்பவன்.

பையன்கள் எல்லாரும் பேசாமல் இருந்தனர். ஒரு பையன் கையைத் தூக்கினான்.

உபாத்தியாயர் சந்தோஷத்தோடு கிருஷ்ணா சொல் என்றார்.

கிருஷ்ணன்:—எங்கள் வகுப்பிலெல்லாம் சோம்பேறி தாங்கள் தான். நாங்கள் எல்லாரும் வாசிக்கும் பொழுது நீங்கள் தான் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு வீண்காலம் போக்குகிறீர்கள்!

ii

கிருஷ்ணனும், குருசாமியும், சின்னச்சாமியும், மதுரையில் ஜோஸ்யக்கடைக்குச் சென்றிருந்தார்கள். ஜோஸியர், நட்சத்திரம், பெயர் முதலியவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டார்.

ஜோ:—(கிருஷ்ணசாமி நாயுடுவின் ஜாதகத்தைக் கணித்துக்கொண்டு)

ஐயா! ஜாதகன் சம உயரம், (சரி)
பொது நிறமானவர் (சரி)
காலி கன்றுகளையுடையவர் (சரி)
இரண்டு வீட்டுச் சொத்துக்களை
யடைந்தவர், (சரி)
நல்ல குணவான், (சரி)

"ஐயா இந்த நேரத்தில் அவருக்கு ஓர் ஆபத்து நேர்ந்திருக்கிறது" என்றார். வந்தவர்கள் "என்ன ஐயா ஆபத்து ?!' என்று, ஆச்சரியத்தோடு கேட்டார்கள்.

ஜோ:—ஐயா, இந்த ஜாதகனை இந்த நேரத்தில், சில ஏமாற்றுக்காரர்கள் சேர்ந்து பணம் பறித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கிருஷ்:—ஜோஸ்யர்வாள் ! தாங்கள் மிகவும் கெட்டிக்காரர் !! ஜாதகன் நான்தான் !!! உங்களைப்பற்றி, உங்கள் வாயிலிருந்தே உண்மை வெளியானதற்கு மிகவும் சந்தோஷம் !!!

iii

புலவர் ஒருவர் சமீபத்தில் ஓர் உபந்யாசத்தில், "தேவடியாள்" என்ற பதத்திற்குத் தேவர்களையும் அடியார்களாகக் கொண்டவள் எனப்பொருள், கூறினார். அது உண்மையாயின் மனிதர்கள் அவர்களுக்கு அடிமைகளாவது பெரியகாரியமா என்று ஹாஸ்யன் கேட்டான்.

எத்தாற் பிழைக்கலாம் ஒத்தாற் பிழைக்கலாம்.

முருகன்

"முருகன்" என்னும் இக்கட்டுரை நமது நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமான், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களால், காரைக்குடியினின்றும் வெளியாகும் "குமரன்" என்னும் பத்திரிகைக்கென எழுதப்பட்டது. இக்கட்டுரை "குமரன்" சதங்கை-க-மணி-க-ல் வெளிவந்திருக்கிறது. கட்டுரை வருமாறு:—

முருகன் எவன்? முருகையுடையவன் முருகன். முருகு என்றால் என்னை? முருகு என்னுஞ் சொல் பல பொருள் குறிக்கும் ஒரு சொல். முருகு என்னுஞ் சொல்லில் சிறப்பாக நான்கு பொருள் அடங்கி யிருக்கின்றன. அவை மணம், இளமை, கடவுள்தன்மை அழகு என்பன. இந்நான்கு பொருளடங்கிய ஒரு சொல்லால் பண்டைத் தமிழ்மக்கள் முழுமுதற் பொருளை அழைத்தது கவனிக்கற்பாலது. இயற்கை மணமும், மாறா இளமையும் எல்லாப் பொருளையுங் கடந்தொளிருந் தன்மையும், அழியா அழகும் இறைவனிடத்தில் இலங்குவது கண்டு, அந்தப்பொருள்கள் முறையே உறைதற்கிடம் பெற்றுள்ள முருகன் என்னுஞ் சொல்லை, ஆண்டவனுக்குச் சூட்டியதன் திறமை நோக்குழி, பழந் தமிழ் மக்களின் கூர்த்தமதியை என்னென்று வியந்து பாராட்டுகிறது? உலகத்தின் நாலு பக்கங்களிலும் வாழ்ந்து வரும் மக்கள், தங்கள் அறிவாற்றலுக்கேற்றவாறு, தங்கள் மொழியில் கடவுளுக்குப் பலதிறப் பெயர்கள் சூட்டி யிருக்கிறார்கள். அப்பெயர்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்புப் பொருள் விளங்குகிறது. சிலவற்றில் பொருத்த மில்லாத பல

பொருள் விளங்குகின்றன. முருகன் என்னுஞ் சொல்லிலே அறிஞர் போற்றும் பொருள்கள் மிளிர்தல் காணலாம். ஆதலால் அறிஞர் போற்றற்குரியதும், மகிழ்ச்சி தரக்கூடியதும் பொருத்தமுடையதுமாக இருப்பது முருகன் என்னுந் திருப்பெயர். மணமுடைமை, இளமையுடைமை, கடவுள்தன்மை யுடைமை, அழகுடைமை ஆகிய இவைகளைப் போற்ற மறுப்போர் முருகனைப் போற்ற மறுப்பர். மணமுடைமை முதலிய நான்கினையும் போற்ற மறுப்போர் இரும்பு மனமும் வன்கண்மையுமுடைய முரடராயிருப்பர். இரக்கமில்லா உள்ளத்தில் முருகு அலர்தல் அருமை.

இனி, மணம், இளமை, கடவுள்தன்மை, அழகு என்னும் நான்கு பொருளில் சிறப்பாக அழகு என்பதை நான் எடுத்துக் கொள்கிறேன். அழகு உள்ள இடத்தில் ஏனைய மூன்றும் விரவிநிற்கும். அழியா அழகில் மணமும் இளமையும் கடவுள் தன்மையும் கலந்து நிற்றல் இயல்பு. அழியா அழகு என்று ஈண்டுக் குறிப்பிட்டது கருதற்பாலது. கைபுனைந்தியற்றா ஓரழகே அழியா அழகெனப்படும். கைபுனைந்தியற்றும் அழகு அழியுந் தன்மையது. "கைபுனைந்தியற்றாக் கவின் பெரும் வனப்பு" என்றார் நக்கீரனாரும். கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கரத்தால் ஆக்கப்பட்டவை? அவை எக்கருவிகளால் செய்யப்பட்டவை? எவர் முயற்சியால் ஞாயிறு ஒளிவீசுகிறது? திங்கள் நிலவு பொழிகிறது? கோள்கள் மின்னுகின்றன? நீரிற்குத் தண்மை ஈந்தவர் எவர்? நெருப்

புக்கு வெம்மை யூட்டினவர்யாவர்? ஆ! ஆ! இயற்கையின் ஆற்றல் என்னே! என்னே!!

இயற்கையின் ஆற்றல் ஒருபால் கிடக்க அதன் ஆற்றலினும் அதன் அழகே உள்ளத்தைக் கவர்ந்து இன்பமூட்டுகிறது. இயற்கை அழகில் கருத்தைப் பதியவைத்துள்ள ஒருவன், அதனோடு புணருந்தோறும் அவனுள் கிளர்ந்தெழும் இன்பம் பேரின்பமாகும். இவ்வின்பத்துக் கிணையாக மற்றுமோர் இன்பமுமுளதோ? இவ்வின்பத்தையன்றோ சுந்தரர் நுகர்ந்தார்? மாணிக்க வாசகர் பருகினார்? இவ்வின்ப ஊற்றைத் திறக்கத்தக்க அழகு இயற்கை வாயிலாகக் காணக்கிடக்கிறது. அவ்வழகே அழியா அழகு. அதுவே முருகென்னும் பேரழகு. பண்டைத் தமிழ் மக்கள் இயற்கைவழி வாழ்வைச்செலுத்தி, அதற்கு அடிப்படையாகவுள்ள இறைவனுண்மை கண்டு, அவனழகால் இயற்கை அழகு பெறுவது நோக்கி, அவ்விறைவனை அழகன் என்னும் பொருள்பட முருகன் என்னும் பெயரால் அழைத்தார்கள். இவர்கள் இயற்கை வாயிலாக முருகைக்கண்டு நுகர்ந்த இன்பத்தைக் கலித்தொகை, பத்துப்பாட்டு, திருக்கோவையார் முதலிய நூல்களில் காணலாம்.

முருகன் மலையாக நின்றும், ஆறாக ஓடியும், காடாக விளங்கியும், கடலாக ஒலித்தும், உடலாக உடனிருந்தும் உயிர்களை ஓம்பிவரும் திருவருட்டிறத்தை எவரே புகழவல்லார்? எம்பெருமான் நீலக்கடலில் காலையில் நெருப்புப்பிழம்பு போல ஞாயிறாகப் புறப்பட்டு உலகுக் குதவாவிடின், உலகம் என்ன பாடுபடும்? அவன் திங்களாக அமுதம் பொழிந்து உலகுக்கு இன்ப மூட்டுவதை

உணராத புலன்களும் புலன்களாமோ? முருகன் இயற்கை வாயிலாக ஆடிவரும் திருவிளையாடல்களை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இயற்கை வாயிலாக முருகு என்னும் அழியா அழகைக் கண்டவர்பால் என்றும் மணமே கமழ்ந்துகொண்டிருக்கும். அவர்மீது புலால் மணங் கமழாது. அவர் மணத்துக்கென வேறு செயற்கை வாசனைகளைத் தேட வேண்டுவதில்லை. இயற்கை மணம் வீசப் பெறுவோர் என்றும் இளமை யுடையரா யிருப்பர். என்றும் இளமை யுடையவராக வாழவிரும்புவோர் எம்பெருமான் முருகனை எப்பொழுதும் நினைந்த வண்ணமா யிருப்பாராக. இயற்கைக்குக் காரணமாக உள்ள முருகு என்றும் இளமையா யிருப்பதால், இயற்கைப் பொருள்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே ஆற்றுகின்றன. முருகின் இளமை குன்றுவதாயின், இயற்கையும் தன்செயலில் குன்றும். ஆனால் இயற்கை எத்துணைகாலம் எவ்வெவ் வழியில் தொழிற்படினும், அஃது இளைத்துச் சலித்துச் சாய்வதில்லை. என்னை? காரணமாக வுள்ள முருகு என்றும் இளமையா யிருப்பதால், காரியமாகிய இயற்கையும் என்றும் இளமை என்னும் வளமை குன்றாமல், ஒரு பெற்றியாய்த் தன்செயலைச் சலிப்பின்றிச் சாய்வின்றி நடாத்திக் கொண்டு போகிறது. ஆதலால் இயற்கைவழி முருகைக் காண்போன் என்றும் இளையனாயிருப்பன். மலைக்கிழங்கை உண்டும், காட்டுப்பழங்களைத் தின்றும், வயல் தானியங்களைப் புசித்தும், கடல்காற்றைப் பருகியும் வாழ்வோரை விரைவில் முதுமை அணுகாது. இயற்கைப் பொருள்களைத் தங்கள் விருப்பப்படி வேறு பல பொருளோடும் புலா

லோடும் கலந்து வேகவைத்துப் பதஞ்செய்து விலாப் புடைக்க உண்பதிலேயே காலங்கழிக்கும் மனிதர்களை விரைவில் முதுமை அடர்ந்து வருத்தும். இயற்கை மணமும் மாறா இளமையும் உடைய ஒன்று தத்துவத்தில் கட்டுப்பட்டுக் கிடக்காது. அது தத்துவங் கடந்த தனிப்பொருளாய் இலங்கும். ஆதலால், கடவுள்தன்மை மணமும் இளமையும் உடைய முருகனிடத்தில் இயல்பாகவே அமைந்து கிடக்கிறது. மணமும் இளமையும் கடவுள்தன்மையும் ஆகிய இம் மூன்று முடைய ஒன்றன் அழகை எழுத்தால் எழுத முடியுமோ?

முருகன் என்னுஞ் சொல்வழக்கு எந்நாளில் உண்டாயிற்று என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. ஆராய்ச்சிக்காரர் இற்றைக்குச் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முருகன் என்னுஞ் சொல் ஆட்சியிலிருந்தது என்று கூறுப. இன்னும் அம்மொழி இறந்து படவில்லை. முருகனைப் போற்றுவார் இன்னும் உளர். என்றும் மாறா இளமையுடைய முருகன் தொன்மை மிகுந்த பெருங்கிழவன் போலும்! தமிழ் மக்கள் முருகனை மலைநிலக்கடவுளாகக் கொண்ட தொன்றே, அப்பெருமானின் தொன்மையை நனிவிளக்கும். ஆசிரியர் தொல்காப்பியனார் உள்ளிட்ட பல்லோர் "சேயோன் மேயமைவரை யுலகம்" என்றும் "குறிஞ்சிக்கிழான்" என்றும் "மலைகிழவோனே" என்றுங் கூறிப் போந்தனர். தமிழ்மக்கள் வாழ்வு முதல் முதல் தொடங்கப்பட்ட இடம் மலையேயாகும். அவர்கள் ஆண்டிருந்து பிறநிலங்களுக்குப் பின் போந்தார்கள். மலையில் வாழ்ந்த மக்கள், பின் பிற நிலங்களில்

குடிபுகுந்து அவ்வந் நிலங்களின் இயல்புக்கேற்ற கடவுளர்களைக் குறித்துக் கொள்ளினும், முதல் முதல் தாங்கள் கொண்ட மலைநிலக் கடவுளாகிய முருகனையே அவர்கள் தங்கள் குலதெய்வமாகப் போற்றுவாராயினர். தமிழ்க் கடவுள் என்பது முருகனுக்கே சிறப்பாக வழங்கப் படுகிறதன்றி ஏனைய நிலக்கடவுளர்க்கு அப்பெயர் வழங்கப்படுவதில்லை. தமிழ்மக்கள் வாழ்வு என்று மலை நிலத்தில் தொடங்கப்பட்டதோ, அன்று தொட்டு இன்றுவரை முருகன் தமிழ்நாட்டுத் தெய்வமாகப் போற்றப்பட்டு வருகிறான். இன்னும் அவன் இளையனாகவே இருக்கிறான். இன்னும் என்றும் அவ்வாறிருப்பன். அவன் அழகன்றோ அழகு?

எங்கணும் இயற்கை வடிவாக நீக்கமற நிறைந்துள்ள இறைவனும் முருகனை வழிப்பட்டுய்யும் பொருட்டு, மெய்யடியார்கள் பல இடங்களில் முருகக் கடவுளுக்குத் திருக்கோயில்கள் கட்டினார்கள். அக் கோயில்களில் முருகன் வீற்றிருந்தருளுவதோடு, ஒவ்வொரு சிவாலயத்திலும் அப்பெரியோன் வீற்றிருந்தருள்கிறான். முருகன் திருவுருவை வழிபடுவோர், அவர் விரும்பும் எல்லா நலங்களையும் பெறுவர். முருகன் மக்கட்கு இன்றியமையாத அருட்செல்வம் பொருட்செல்வம் முதலிய எல்லாச் செல்வங்களையும் அளிப்பன். முருகப் பெருமான் தன்னைவழிபடும் அன்பர்கட்குத் தோன்றாத் துணையாகநின்று செய்துவரும் பேருதவி, அவன் அடியவர்க்குத் தெரியும். நம்பிக்கையால் முருகனிடத்து எல்லாம் பெறலாம்.

பண்டைக்காலத் தமிழ்மக்கள் பெரிதும் மருந்தையும் வயித்தியனையும் நாடி ஓடினார்களில்லை. மருந்தும்

வயித்தியனும் முருகனே என்று அவர் கருதிவந்தனர். அவ்வழக்கம் இன்றும் பலவிடங்களில் ஆட்சியிலிருக்கிறது. தமிழ்மக்கள் நோயால் பீடிக்கப்படும்போதும், வேறுபல குறைகளால் வருந்தும்போதும் முருகனை நோக்கி வேண்டுதல் செய்து அவன் திருக்கோயில் சென்று, தொண்டு புரிந்து நோயும் குறைகளும் நீங்கப் பெறுவர். முருகக்கடவுள் எழுந்தருளியுள்ள திருத்தணிகை, திருப்போரூர், திருமயிலம், திருவாவினன்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் முதலிய திருப்பதிகளில் மக்கள் நம்பிக்கை மேலீட்டால் செய்யுங் காரியங்களை இன்றுங் காணலாம். நம்பிக்கை விசுவாசத்தால் எல்லாக் காரியங்களுஞ் செய்யலா[illegible]க. ஸ்ரீக் கிறுஸ்துநாதர் திறமாய் உலகிற்கு [illegible] யிருக்கிறார். இந்நாளில் பேய் நாகரிகத்தால் நம்பிக்கை என்பது இறந்துபட்டு வருகிறது. நம்பிக்கை ஒழிந்து வருவதால், பிரார்த்தனைகளுங் கைகூடுவதில்லை. "பெந்தகொஸ்தே" சபையில் சேர்ந்த பல்லோர் அமெரிக்கா முதலிய இடங்களில் கடவுளை நோக்கி ஜெபம்செய்து நோய்களைத் தீர்த்து வருவதைச் சஞ்சிகைகளில் நம்மவர்கள் படித்து மகிழ்ச்சி யடைகிறார்கள். நோயாளி இடத்தும் ஜெபஞ் செய்வோரிடத்தும் நம்பிக்கை பூரணமாக இருத்தல் வேண்டும். இல்லையேல் விரும்பியது நிறைவேறாது. நம்பிக்கையால் மனிதன் தேவனுகலாம்.

நம்பிக்கை யில்லாதார் நோய்வாய்ப் படும்போது மருந்துகளையும் வைத்தியனையும் கட்டி அழுதுகொண்டிருப்பர். பண்டைக்கால மக்கள் மனோ உறுதியால், முருகனை வழிபட்டுச் செயற்கருஞ் செயல்கள் செய்

திருக்கிறார்கள். முருகனை வழிபட்டு நம்பிக்கையால் செயற்கருஞ் செயல்களைச் செய்யும் ஆற்றலை நாட்டில் வளர்க்க ஆங்காங்குள்ள சமயச் சங்கங்கள் உழைத்தல் வேண்டும். இப்பொழுது கிறிஸ்துவர்கள் நம்பிக்கை வித்தையால் தங்கள் மதத்தைப் பரப்ப முயன்று வருவதை நேயர்கள் கவனித்து வேண்டுவ செய்வார்களாக. அந்த நம்பிக்கை வித்தையைக் கண்ணுற்று வியப்படையும் நம்மவர்கள், முருகனை வழிபட்டு நம்பிக்கையால் செயற்கருஞ் செயல்கள் செய்து, பெறற்கரிய பேறு பெற்றோர் வரலாறுகளை வாசித்து உண்மை உணர்வார்களாக. நமது நாட்டுத் தற்கால மூதறிஞர்கள் நம்பிக்கையால் முருகனை வழிபடும் அடியார்கள் மனை உறுதியைக் கெடுக்க முயற்சி செய்யாதிருப்பார்களாக. முருகப்பெருமானை வழிபட்டு நம்பிக்கையால் உய்வடைந்தவர் சரிதங்கள் எண்ணிறந்து கிடக்கின்றன. அவைகளை விரிக்கிற் பெருகும். இன்னும் நம்பிக்கை உடையார் குறைகளை முருகன் நிவர்த்திசெய்து வருகிறான்.

இனிப்புராணங்களில் முருகக்கடவுள் வரலாறு ஓதப்பட்டிருப்பதைக் குறித்துச் சில உரை கூறி இக் கட்டுரையை முடித்து விடுகிறேன். முருகன் திருவிளையாடல்களைக்கூறும் புராணங்கள் பல. அவைகளுள் தலையாவது கந்தபுராணம். அதிலுள்ள கதையை ஆராய்ந்தாலும் முருகன் இயற்கைக்காரணன் என்பது புலப்படும். முருகன் சிவபெருமான் திருக்கண்களினின்றும் தோன்றி, வாயுவாலும், அக்னியாலும் தாங்கப்பெற்று, சரவணப்பொய்கையில் குழந்தையாகி; பூமியில் திருவிளையாடல் புரிந்தான் என்று புராணங் கூறுகிறது. இதனை ஆராய்ந்தால் முருகன் மண் புனல் தீ வளி வெளி

என்னும் ஐந்து பூதங்கட்கும் காரணன் என்பது புலனாகும். சிவம்—வெளி; வாயு, அங்கியங் கடவுள் முறையே காற்று தீ; சரவணப்பொய்கை—புனல்; பூமி—மண். இவ்வுண்மையைக்கண்ட கச்சியப்ப முனிவர் தமது தணிகைப் புராணத்தில்,

ஓங்கொளியாய் விசும்பாதி தொறுமியலுந்
    தனதியல்பை உருவின் மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோற் பலபொறியாப்
    பரமர்விழி பயந்த ஞான்று
தேங்கொளியாய் வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள்
    ளொளிபடர்ந்து தெளிநீர்ப்புக்கு
நீங்கிவினை யாட்டயர்ந்து தணிகையமர்
    பெருவாழ்வை நினைந்து வாழ்வாம்.

என்று முருகனைப் போற்றியிருப்பது ஈண்டுச் சிந்திக்கற்பாலது. இச்செய்யுட்களுள்ள நுட்பம் அறிஞர் கருத்தை ஈர்க்கும்.

முருகக்கடவுள் ஆறுமுகங் கொண்டது, வேல் தாங்கியது, சூரர்களைத் தடிந்தது, இருமாதர்களை மணந்தது முதலிய வரலாறுகளிலுள்ள உண்மைகளைக் குமார தந்திரம், கந்தபுராணம், திருப்புகழ், சுப்ரமண்ய பராக்கிரமம், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் பிரபந்தங்கள் முதலிய நூல்களிற் காண்க. ஆறுமுகம்—பிரணவத்தோடு கூடியபஞ்சாக்கரம், சூரர்கள்—ஆணவம் கன்மம் மாயை. வள்ளி—இச்சா சக்தி, தெய்வயானை—கிரியா சக்தி. வேல்—ஞானசக்தி. முருகனுடைய இச்சையால் கிரியையால் ஞானத்தால், மக்களிடத்திலுள்ள இச்சையும் கிரியையும் ஞானமும் கூர்ந்து விளங்கவேண்டுமாதலால், அவன் முறையே மூன்

றற்கும் அறிகுறியாக வள்ளி தெய்வயானை வேல் என்னும் மூன்று சக்திகளையுந் தாங்கியுள்ளான். முருகனை வழிபடுவோர் இம் மூன்றும் விளங்கப்பெறுவர். முருகன் வழிபாடு இப்பொழுது குறைவுற்றுள்ளமையால், மக்கள் இச்சை கிரியை ஞானம் விளங்கப்பெறாது வறுமை முதலிய சிறுமைகளுக்கு அடிமைப்பட்டு இடர்ப்படுகிறார்கள்.

சிவபெருமானை வழிபட்டு நால்வர் தமிழ் வேதம் பாடினார். திருமாலை வழிபட்டுப் பன்னிருவர் தமிழ் வேத மோதினார். முருகனை வழிபட்டு அருணகிரி நாதர் தமிழ் வேத மருளினார். வாக்கிற் சிறந்த அருணகிரிநாதர் அருளிய திருப்புகழை ஓதும் போதும், பிறர் ஓதக் கேட்கும்போதும், முருகக் கடவுளின் நுண்ணிய உருவம் அகத்தில் புலனாவதுபோன்ற ஒரு தோற்றமும், ஒருவித அன்பும் நிகழ்வதைக் காணலாம். இக் காலத்துப் பாவலராக இலங்கிய நமது சுப்பிரமணிய பாரதியார் முருகக் கடவுளைப்பற்றிப் பாடிய பாடல்களிலும் முருகைக் காணலாம். விரிவஞ்சி இவ்வளவில் நின்றுவிடுகிறேன்.

தமிழ்மக்களே! முருகன் எல்லாப்பொருள்களிலும் நீக்கமற நின்று அவைகளை அழகு செய்வதை உங்கள் முன்னோர்கள் கண்டு இன்ப நுகர்ந்தார்களல்லவா? அவ்வின்பத்தை இப்பொழுது நீங்கள் நுகர்கிறீர்களா? இயற்கை, முருகன் வடிவாயிருப்பது உங்கட்குப் புலனாகிறதா? முருகனைக்காண முயலுங்கள். அவன் செந்நெறியை ஓம்பினால் அவனைக் காணலாம். முருகனுக்கு ஏராளமான கோயில்களிருக்கின்றன. இனிப் புதிதாகக் கோயில்கள் கட்டுதல் வேண்டாம். எங்கும் நிறைந்

துள்ள அவனுக்கு எக்கோயிலும் வேண்டாம். அவன் செந்நெறியை வளர்க்கச் சபைகள் காணுங்கள்; அவன் பெயரால் பத்திரிகை நடத்துங்கள்; பாடசாலை அமையுங்கள்; திருப்புகழைப் பொருளுணர்ந்து ஓதுங்கள், இயற்கையிலுள்ள அவனழகை நூல்களாக எழுதுங்கள்; போலி ஞானம் பேசி முருகனிடத்துள்ள அன்பை—நம்பிக்கையை—மன உறுதியைக் கெடுத்துக்கொள்ளாதேயுங்கள்; முருகன் பெயரால் பிணியை ஓட்ட முயலுங்கள்; நம்பிக்கை மதத்தை வளருங்கள்; முருகன் திருவருளால் கட்டுகளை அறுத்துக்கொள்ளுங்கள். பூரண அழகு உங்கள் பால் பொலியும்.

குறிப்பு:—இவ்விஷயம் எளிதில் பொருள் விளங்கக்கூடியதல்லவாதலினால், பெற்றோர்களும் உபாத்திமார்களும் பிள்ளைகட்கு இதனை விளக்கியருளுவாராக.

[சந்தாதாரர்களில் அநேகர் முருகப்பெருமானை வழிபடும் பக்தர்களாயிருப்பதனால் இந்த அருமையான விஷயத்தைப் பிரசுரிக்கலானோம்.—ப - ர்]

சூதஸம்ஹிதை வசனம்	1	8	0
சிறியவர்க்குப் பெரிய புராணம்	0	8	0
ராமாயண ரகஸ்யம்	0	01	0
தேசபக்த கீதம்	0	8	0
கம்பராமாயண சுருக்கம் வசனம்	2	0	0

பாலவிநோதினி ஆபீஸ்,

ராயப்பேட்டை சென்னை.

பாலர் நீதிபோதம்.

பாலர்களே !

(1) உங்கள் வாழ்க்கை இனிமையானது; கவலை யற்றது. வாழ்நாளில் சந்தோஷகரமான பருவம் இளமையே. இந்த வயதிலன்றோ நீங்கள் இம்மையில் பிற்கால வாழ்வின் மேன்மைக்கும் மறுமையில் நித்யானந்த வாழ்வின் பெரும்பேற்றிற்கும் அனுகுணமான கல்வியைக் கற்கவேண்டும். "அஞ்சில் வளையாத உடல் ஐம்பதில் வளையுமோ?" கல்வியே கண். கல்வி இலான் கடையான். ஆகையால் "இளமையில் கல்" என்று கூறினள் ஔவை. ஏனென்றால் "கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி." வீடு, வீதி, பாடசாலை மூன்றிடங்களிலேயே உங்கள் காலம் போக்கப்படுவதால் அங்கங்கே நீங்கள் ஒழுங்கிலும் நன்னடக்கைகளிலும் கவனம் செலுத்தி வருவீர்களேயானால் நல்ல மாணாக்கர்களாவீர்கள். சற்புத்திரர்களுமாவீர்கள்; பரோபகாரர் என்றும் போற்றப்படுவீர்கள்.

வீட்டில்.

(2) வைகறைதுயிலொழித்து, தேக அசுத்தங்களை நீக்கி எல்லாம்வல்ல ஈசனை ('மதக்குறி தரித்து') மனமார வணங்குவதைத் தினமும் மறவாதீர்கள். அன்னையும் பிதாவும் முதலில் அறிந்த தெய்வங்கள் என்பதை நடத்திக் காட்டிய புண்டரீகன், ஸ்ரீ ராமபிரான் முதலியவர்களைப் போல் மெய்யன்பு செலுத்திக் கீழ்ப் படிந்து அவர்கள் இட்ட வேலையை "ஏவாமக்கள் மூவாமருந்து" என்று நினைக்குமாறு செய்யவும்

பெற்றோரை என்றும் ஆதரிக்கவும் மறவாதீர்கள். உங்களைவிட வயதிலும் அறிவிலும் முதியோரிடம் மரியாதையுடனிருந்து அவர்களிடம் சிற்றேவலைச் செய்யுங்கள். அர்ச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணருக்குக் கால் பிடித்ததால் வெற்றியும் சுயோதனன் கர்வங்கொண்டு தலைப்புறம் வீற்றிருந்ததால் தோல்வியும் அடைந்ததைக் கவனியுங்கள்.

(3) வாயில் வசைச்சொற்களும் பிறர் அருவருக்கும் மொழிகளும் பொய், கோள், முதலிய குற்றங்களும் வராதபடி எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். இல்லையேல் "எதால் கெட்டேன் நோறுல் கெட்டேன்" என்று சொல்லவரும். " நுணலும் தன்வாயால் கெடும் " என்றவாறும் ஆகும். விசுவாமித்திரன் மானமழிய அரிச்ச[illegible] ய விஜயனும் விளங்கியது எதனால்? கவனியுங்கள் கழ்ச்சி தல் அதாவது பேரவா ஒழித்து, பொறுமையே பூஷணமாய்க் கொண்டு அழுக்காறகற்றி, அறத்தை விரும்பி அனைவருடன் சமரசமாக ஒத்து வாழக்கடவீர். "ஐக்யம் பலமன்றே?" ஸ்ரீ இராமபிரான் குரங்கரசனையும் வேடுவத்தலைவனையும் இராவணனது சகோதரனையும் சகோதரராய் மதித்ததாலன்றோ தேவர்களை ஏவல்கொண்ட இலங்கேசனை வென்றார்.

(4) மீதூண் விரும்புவது நோய்க்கிடமாகும். வறுமையைத் தரும். கிடைத்ததைக் கலந்துண்ணும் காகத்தைப்போல் சகோதர நேசருக்கிட்டு உண்ணுங்கள். "பரோபகாரம் பரம தர்மம்" என்பதை மறவாமல் உங்களாலான உதவியை நாட்டிற்கும் நாடினவர்க்கும் செய்து தீரவேண்டியது உங்கள் கடமை. ஏகசக்ர புரவாசிகள் மீதூண் விரும்பிய பகாசுரனுக்குப் பயந்து

வருந்திய கஷ்டத்தைத் தன்னுயிர்போல் மன்னுயிரை நினைக்கும் குந்திதேவியின் புதல்வன் பீமன் போக்க வில்லையா? அவன் அரக்கனை வாட்டி நாட்டினரைக் காத்துத் தன் வீரத்தை வெளியிட்டுப் போற்றப்பட்டானன்றோ?

(5) ஜீவப்பிராணிகளை வதைத்து உன் வயிற்றை அதற்கு ருத்ர பூமியாகச் செய்வது இழிவும் பாபமுமாகும், "கொல்லாவிரதமே விரதம்" "புலையும் கொலையும் களவுந்தவிர்" என்று நீங்கள் படித்ததைச் சிந்தியுங்கள். "கொல்லானைப் புலால் மறுத்தானை எல்லா உயிரும் கை கூப்பித்தொழும்" சிபி சக்கரவர்த்தி ஒரு புறாவின் உயிருக்காகத் தன் தேகத்தைக் கொடுத்தது ஏன்? "அஹிம்சா" தர்மத்தைக் கைக்கொண்டதால் அன்றோ?

வீதியில்.

(6) தவளை, புழு, தும்பி, ஓணான் முதலிய குற்றமற்ற ஜந்துக்களுக்கு விளையாட்டு நிமித்தம் வீட்டிற்கு வெளியில் சில துஷ்டப்பிள்ளைகள் துன்பம் செய்வதை ஒருவேளை நீங்கள் கண்டாலும் கூடியவரையில் இதத்தைச் சொல்லி அவைகளை விடுவிக்கவும் அவர்கள் அந்தத் தீச்செயலைச் செய்யாதிருக்கவும் பிரயத்தனம் செய்யுங்கள்; மாண்டவ்யரிஷி எதனால் தபசியாயிருந்தும் கழுவேற்றப்பட்டார் என்பதை விளக்கிக் கூறுங்கள். அவர்தம் சிறுபிராயத்தில் அறியாமையால் தும்பிகளை வாலைக் கிழித்தும் துரும்பைச்செருகியும்இம்சித்ததினாலல்லவா?

(7) பெற்றோர்க்குத் துன்பம் விளைவிக்கும்படியாய்த் தெருவில் அலைந்து தெருச்சண்டையில் தலையிடாதே

யுங்கள். தெருவில் அயலூரார் அல்லது புதிய மனிதன் உங்கள் உதவியை நாடினால் கூடுமான உதவியைச் செய் யுங்கள். ஏழை எளியவர்களையும் குரூபிகளையும் பரிகாச மாயும் தூஷணமாயும் பேசுவது மகா கொடுமை. அவர்கள் மனம் வருந்துமே என்று அவர்கள் நிலைமையைப்பற்றி வருந்திக் கடவுளைத் துதியுங்கள். அங்கங்கே தெருக்களில் பல ஏழைப் பிச்சைக்காரர்களைக் கண்டால் அவர்களுக்கு உங்களாலான உதவியைச் செய்யுங்கள். தினம் இரப்பவர் கள் தானே எத்தனை பேருக்குக் கொடுப்பது என்று கூற வேண்டாம். ஏழைச் சகோதரர்கள் என்ற நிலையில் அவர் கள் பொது ஜனங்களை நம்பியே வயிறு வளர்ப்போர் என்று கருதி உங்களாலானதைக் கொடுங்கள். சோம் பேறிகள் என்பது நிஜமே. அதில் பாத்திரமறிந்து நடவுங்கள். அங்கஹீனமின்றித் திடகாத்திரனாய் "ஏற் பது இகழ்ச்சி" என்பதையும் "சோம்பித் திரியேல்" என்பதையும் மறந்து வந்தவனாய் இருந்தாலும் கூடத் தூஷணமாய்ப் பேசாதீர்கள். இல்லையேல் பணிவாய் பதில் அளியுங்கள். நமது மதப்படி "ஈசன், அடியா ராயும் ஜங்கமராயும் பிக்ஷுவாயும் வந்து சோதிப்பார்" என்ற கொள்கையை உடைய நாம் யாவரையும் நிந்தி யாமல் பூஜிப்பதே கடமையாம்.

8. ஆசிரியரும் பெற்றோரும் பந்துக்களும் உங் களையறிந்த பெரியோரும் தெருவில் எதிர்ப்பட்டால் அவர்களைக் கைகூப்பித்தொழுது பணிவாய்ச் செல்லுவது மேன்மைப்படுத்தும். தெருவில் ஓடிச்செல்வதும் வழி மாறிச் செல்வதும் தரையை நோக்காது மேல்பார்வை யாய் செல்லுவதும் தீங்கை விளைவிக்கும். எங்கே கட வுள் கோவிலைக் காண்பீரோ அங்கு மனப்பூர்வமாய்க் கூடுமேல் அங்கம் தரையில்பட நமஸ்கரிப்பது மேன்மை.

வேலையில் கவனத்துடன் இருக்கவேண்டும். நடக்குங் கால் வீணில் பராக்கு பார்த்துக் காலத்தை ஒழித்து ஏமாறவேண்டாம். "காலமே கருந்தனம்" ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும். தமயந்தியின் சுயம்வரத்தில் தேவர்களும் கலிபுருஷனும் காலதாமதத்தில் வந்ததாலல்லவா ஏமாந்தனர்?

(9) பிறர் பேசுங்கால் நடுவில் பேசுவது தப்பான காரியம். சபைகளில் அமரிக்கையாயும் பணிவாயும் இருங்கள். சாந்தமாயும் தெளிவாயும் சுருக்கியும் விரிந்தபொருளடங்கிய விஷயங்களை அக்ராசனர் உத்தரவை கவனித்தும் பேச அப்பியாசம் செய்துகொள்வது உசிதம். எதிர்பாராத ஆபத்து நேர்ந்தபொழுது தைரியத்தை விடாதீர்கள்.

பாடசாலையில்

(10) "குருவை" கடவுளாக பாவிக்கவேண்டும். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற திருவாக்கை நன்றாய்ச் சிந்தித்து அதன்படி நடவுங்கள். ஏகலைவன் வில்வித்தை பெற்றதும் கார்த்தவீரியன் ஆயிரம் கரம் பெற்றதும் குருபக்தியினாலன்றோ? பள்ளிநேசரைச் சகோதரராக பாவித்து வருவதுடன் எதிர்கால வாழ்க்கையில் ஸ்ரீ கிருஷ்ணர் குசேலரிடம் நடந்ததுபோல நடந்து காட்டுவது அழகும் கீர்த்தியுமாகும். பள்ளிக்கூட ஒழுங்கை மீறாமல் மதப் படிப்பையும் தாய் பாஷையையும் பத்திரிகைகளையும் தினமும் அவமதியாமல் கற்கவேண்டும். குருசிஷ்ய இலக்கணம் விரியுமாகையால் அடுத்தமுறை கூறுவாம். (இதனைக்கண்ணுறும் ஆசிரியர் பாலர்களுக்கு உபமானக் கதைகளை விளக்கிப் போதிப்பார்களாக.)

நா. கிருஷ்ணசாமி ஐயர்
தலைமை ஆசிரியன், குறம்பேறி,
திருப்பத்தூர் (வடாற்காடு.)